DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Fast Track Magistrate, Srivilliputtur.

STC.No. 1360–2025

Deposition of Witness for D.W. 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | குருசாமி | **தாலுகா** | : | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| **த.பெ.** | : | பாஸ்கரன் | **தொழில்** | : | வியாபாரம் |
| **ஊர்** | : | ஸ்ரீவில்லிபுத்தூர் | **வயது** | : | 40 |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 17.03.2026.

புகார்தாரர் ஆஜர்.எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

புகார்தாரரை எனக்கு என் தந்தை திருவில்லிபுத்தூரில் வைத்தியநாத சுவாமி கோவில் அருகே கடை வைத்திருப்பதால் நான் என் அப்பா கடைக்கு செல்வதால் அங்கு புகார்தாரர் வருவதால் புகார்தாரர் எனக்கு பழக்கம். புகார்தாரர் எதற்காக என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் புகார்தாரர் என்னிடம் லிபோ நாணயங்கள் என்ற புராதன நாணயங்கள் சம்மந்தப்பட்ட தொழில் இருப்பதாகவும் அதனை நாங்கள் சேர்ந்து செய்வோம் என தெரிவித்தார். புகார்தாரர் என்னிடம் அந்த தொழிலிற்காக பணம் உள்ளதா எனக் கேட்டார் நான் இல்லை எனத் தெரிவித்தேன். என்னை ஒரு காசோலை மட்டும் கையொப்பம் செய்து எடுத்துவருமாறு சொன்னார். நான் காசோலையில் கையொப்பம் செய்யவில்லை சென்னையில் டி.நகரில் தமிழ்நாடு சாலியர் சமுதாய கல்யாண மடத்தில் தங்கியிருந்தபோது ரூ.50,000/– மட்டும் நிரப்பி கையொப்பம் செய்யாமல் காசோலையை கொடுத்தேன்.

அந்த நாணயம் தொழில் செய்பவர்கள் அந்த நாணயத்தை எடுத்து வந்தார்கள். ஒரு நாணயத்தின் விலை ரூ.1,20,000/– என என்னிடம் சொன்னார்கள். நான் அவ்வளவு பணம் இல்லை எனத் தெரிவித்தேன். நான் காசோலையை புகார்தாரிடம் கொடுத்துவிட்டேன். அவர்கள் மறுபடியும் மாலை வந்தார்கள். அந்த தொழில் சட்டவிரோதமான தொழில் என்றும் காசோலை வாங்கமாட்டோம் என்றும் ரொக்கமாக கொடுங்கள் என்றும் கேட்டார்கள். புகார்தாரர் அவர் கைவசம் ரூ.1,20,000/– ரொக்கமாக வைத்திருந்தார் அவர் அந்த நாணயத்தை ரூ.1,20,000/– கொடுத்து விலைக்கு வாங்கிக் கொண்டார். புகார்தாரர் என்னிடம் அந்த நாணயத்தை கொடுத்துவிட்டார். புகார்தாரரிடம் என் காசோலை இருந்தது. இங்கு வந்து புகார்தாரர் என்னால் தொழில் செய்ய முடியவில்லை என்றும் நாணயத்தை யாரும்வாங்க முன் வரவில்லை என்றும் என்னை அந்த நாணயத்தை வைத்துக் கொள்ளுமாறும் வாடிக்கையாளர் யாரும் வந்தால் தெரிவிக்குமாறு சொன்னார். புகார்தாரர் சென்னைக்கு சென்று வர பணம்

B-குருசாமி

செலவழித்தார் அந்த பணத்தை என்னிடம் கேட்டார். நான் என் கையில் பணம் இல்லை என்று தெரிவித்தேன். எங்கள் இருவரிடையே வாக்குவாதம் நடைபெற்றது. புகார்தாரர் பணத்தைக் கொடு அல்லது காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வேன் என தெரிவித்தார். நான் அவரிடம் பணமே வாங்கவில்லை எனத் தெரிவித்தேன்.

நான் ரூ.50,000/- மட்டும் நிரப்பி கொடுத்தேன் என்றும் புகார்தாரர் அதற்கு முன்பாக 7 அவராகவே சேர்த்துக் கொண்டதாக சொன்னேன். அதற்கு புகார்தாரர் அவர் அபக் வங்கியில் கடன் வாங்கியுள்ளதாகவும், அதற்கு மாத தவணை செலுத்தவேண்டும் என்றும் புகார்தாரரை நெருக்கிறார்கள் என்றும் செலவழித்த தொகையை கேட்டார். மேலும் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தால் நான் நீதிமன்றத்தில்தான் பார்த்துக் கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்தார். நானும் புகார்தாரரும் பேசிய விபரத்தை பதிவு செய்தேன். அந்த பதிவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அந்த நாணயமானது **எ.த.சா.பொ.1** ஆகும். அந்த உரையாடல் அடங்கிய பென்டிரைவ் மற்றும் அதற்கான சான்று **எ.சா.ஆ.1** ஆகும்.(புகார்தாரர் தரப்பில் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)

நான் என் செல்போனில் பதிவான பதிவை OTT cable மூலமாக பதிவிறக்கம் செய்தேன். என்னுடைய அலைபேசி எண்.8056350510ல் இருந்து புகார்தாரரின் மொபைல் எண்.8144745211-ற்கு போன் செய்து, 26.06.2025 இரவு 09.05.ற்கு பேசினேன். சென்னைக்கு சென்றதற்கு புகார்தாரர் ரூ.32,000- செலவு செய்தார். ஒரு நாணயம் வாங்கியதற்கு எதற்கு ரூ.7,50,000/- காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் புகார்தாரர் கேட்டது ஒரு நாணயம்தான். சென்னை விடுதிக்கு 6 நாணயங்கள் எடுத்து வந்தார்கள். ஆனால் புகார்தாரர் ஒரு நாணயம் தான் வாங்கினார்.

**குறுக்கு விசாரணை :**

புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

B.இ.இசை

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

17/3/26

நீதித்துறை விரைவு நடுவர்
திருவில்லிபுத்தூர்.